செ.கு. எண் :- 80 நாள் :- 22-02-12

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

அறிக்கை - 22.2.2012

சென்னை மாவட்டம், அடையாறு, மல்லிகைப்பூ நகரில் உள்ள ஒரு தனியார் மேல்நிலைப்பள்ளி மற்றும் சென்னை பெரு நகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தின் சுற்றுச் சுவர்கள் கடந்த 31.12.2011 அன்று இடிந்து விழுந்ததில், அப்பகுதியைச் சேர்ந்த திரு. ஏழுமலை என்பவர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை மூலம் அவரது இடது முழங்கைக்கு கீழ் அகற்றப்பட்டது என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்து அதன் காரணமாக இடது முழங்கைக்கு கீழ் உள்ள பாகம் வெட்டி அகற்றப்பட்ட திரு. ஏழுமலைக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் நிதி உதவி வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை 9